இலத்தேரி ரெயில்வே கிராசிங்கில் மேம்பாலப் பணி அமைக்கப்படுமா?

# காட்பாடி ரெயில் நிலைய மறு மேம்பாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்படுமா?

## மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக.9-

இலத்தேரி ரெயில்வே லெவல் கிராசிங்கில் ரெயில்வே மேம்பாலம்/ சுரங்க பாலம் அமைப்பது, காட்பாடி ரெயில் நிலைய மறுமேம்பாடு பணிகளின் தற்போதைய நிலை குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

சமீபத்திய ரெயில்வே கிராசிங் விபத்து சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இன்டர்லாக் செய்யப்படாத லெவல் கிராசிங்கு களில் குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் காட்பாடி அருகே உள்ள இலத்தேரி ரெயில் நிலைய த்தில் உள்ள லெவல் கிராசிங் எண். 57 (LC57) அடிக்கடி ரெயில் போக்குவரத்து, அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்து, நீண்ட நேர மூடல் மற்றும் விபத்து அபாயம் காரணமாக பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்துகிறது என்பதை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

ரெயில்வே மேம்பாலம் அல்லது ரெயில்வே சுரங்க பாலம் அமைப்பதன் மூலம் LC57 ஐ அகற்ற ஏதேனும் திட்டம் உள்ளதா? ஆம் எனில், அதன் விவரங்கள் தருக? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் யாவை?

NH75 இல் உள்ள காட்பாடி சந்திப்பில் உள்ள சாலை ரயில் பாலம் திட்டத்தின் நிலை, ஒதுக்கப்பட்ட நிதி, டெண்டர் இறுதி செய்தல், எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி குறித்தும் மற்றும் காட்பாடி நிலைய மறு மேம்பாடு மற்றும் வேலூர் பைபாஸ் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு பணி தற்போதைய நிலை என்ன?

தேசிய ரெயில்வே நவீனமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கு ஏற்ப இந்தத் திட்டங்களை விரைவு படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ரெயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

ரெயில்வே லெவல் கிராசிங்குகளுக்கு (LCs) பதிலாக சாலை மேம்பாலம் (ROB)/சாலைக்கு அடியில் பாலம் (RUB) பணிகளை அனுமதிப்பது இந்திய ரயில்வேயின் தொடர்ச்சியான செயல்முறையாகும். இத்தகைய பணிகள் ரயில் செயல்பாடுகளில் பாதுகாப்பு, ரயில்களின் இயக்கம் மற்றும் சாலை பயனர்களுக்கான தாக்கம் மற்றும் சாத்தியக்கூறு போன்றவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. அதன் தாக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத்தில் ரூ.4,669 கோடி செலவில், இவை திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

சென்னை ரெயில்வே டிவிஷன் அரக்கோணம்-ஜோலார்பேட்டை பிரிவில் உள்ள லத்தேரி யார்டில் கி.மீ 136,900-137,000 இல் உள்ள லெவல் கிராசிங் (LC) எண். 57, கேட் சிக்னல்களால் (இடைபூட்டு) பாதுகாக்கப்படுகிறது. இந்த லெவல் கிராசிங்கிற்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பணி செலவு பகிர்வு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. பின்னர், இருபுறமும் அடர்த்தியான மக்கள் தொகை காரணமாக இந்த ROB இன் அணுகுமுறைகளை நிர்மாணிப்பது சாத்தியமில்லை என்று கண்டறியப்பட்டது.

அதன் காரணமாக இந்த பணி மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், உயரம் குறைந்த சுரங்கப் பாதை (LHS) கட்டுமானம் சாத்தியமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, சுரங்கப்பாதை கட்டுமானப் பணி சமீபத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமிர்த பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பிற்காக காட்பாடி ரெயில் நிலையத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. RPF மற்றும் சாரணர் கட்டிடத்தின் கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புறப்பாடு முனையத்தின் அடித்தளம், பல நிலை கார் பார்க்கிங், பார்சல் அலுவலகம், பணியாளர்கள் குடியிருப்புகளின் கட்டமைப்பு பணிகள் மற்றும் RPF பாராக் மற்றும் சாரணர் கட்டிடத்தின் இறுதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

NH75 இல் காட்பாடி சந்திப்பின் வழியாகச் செல்லும் தற்போதைய இருவழி ROBக்கு அருகில் கூடுதலாக இருவழி ROB அமைக்கும் பணியை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் / இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. பொது ஏற்பாடு வரைபட ஒப்புதல் அளிக்கப்பட்டு வடிவமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காட்பாடி சந்திப்பு நிலையத்தின் முதன்மைத் திட்டம், நிலையத்தின் தெற்குப் பகுதியில் உள்ள தற்போதுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் ஸ்கைவாக் மூலம் புறப்பாடு மற்றும் வருகை முனையக் கட்டிடத்துடன் சாலை மேம்பாலம் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வேலூர் பைபாஸ் திட்டத்தில், சென்னை டிவிஷன் அரக்கோணம்ஜோலார்பேட்டை பிரிவில் இலத்தேரி மற்றும் விருஞ்சிபுரம் நிலையங்களுக்கு இடையில் ரயில்வே கி.மீ 137,600700 இல் ஒரு ROB மற்றும் திருச்சிராப்பள்ளி டிவிஷன் விழுப்புரம் காட்பாடி பிரிவில் உள்ள கனியம்பாடி மற்றும் பென்னாத்தூர் நிலையங்களுக்கு இடையில் 140,800900ல் மற்றொரு ROB ஆகியவை அடங்கும். இந்தப் பணிகள் தமிழ்நாடு அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவால் ஒற்றை சாளர அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
03.03.1935

மறைவு:
07.08.2025

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும்
தொ.மு.ச.பேரவையின் முன்னாள் துணைத் தலைவருமான

## இரெ.கோவிந்தசாமி
அவர்கள்

07.08.2025 வியாழக்கிழமை காலை 8.15 மணியளவில்

## இயற்கை எய்தினார்

அவரது உடல் ரமேஷ் நகர் 3வது குறுக்குத் தெரு மேற்கு தாம்பரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

அன்னாரின் இறுதி ஊர்வலம் 08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்...

**மகன்கள் - மகள்:**

கோ.திருமாவளவன், கோ.நன்மாறன் (அரசு வழக்கறிஞர்- சென்னை உயர்நீதிமன்றம்)

கோ.இளங்கோ, கோ.கோப்பெருந்தேவி

மற்றும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் - நண்பர்கள்


# நூற்றாண்டு நூலகம் கலைஞர்!



தமிழ் போற்றும் கலைஞர், சமூகம் போற்றும் கலைஞர், அரசியல் போற்றும் கலைஞர், உலகம் உள்ளவரை வான் உயர்ந்த வள்ளுவனைப் போல் வாழ்ந்து கொண்டே இருப்பார், நூற்றாண்டு நூலகமாய் திகழ்வார் தலைவர் கலைஞர்.

உலக தமிழர் போற்றும் தலைவர்,ஐந்தாம் வகுப்பு மாணவனாக பள்ளியில் தொடங்கிய போராட்டம், தனது இறுதி வாழ்விலும் சேப்பாக்கத்தில் போராட்டம், நீதிமன்றம் வெற்றியை பரிசாக தந்தது, பகுத்தறிவு பள்ளி கடற்கரையில் பேனாவுடன் எழுந்து நின்றது,

மாணவப் பருவத்திலே கல்வி மற்றும் சுயமரியாதைப் போராட்டம், ஐந்தாம் வகுப்பு மாணவனாக கல்விக்கு போராட்டம், வித்வான்களானாலும், திறமைசாலிகளானாலும் கிராமத்தில் உள்ள ஆதிக்க சக்திகளுக்கு தலைவணங்க வேண்டிய நிலை இருந்ததைக் கண்ட கலைஞருக்கு தீக்கனல் மூண்டது, சுயமரியாதைப் போராட்டம் பிறந்தது,

13 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர், 13 முறை தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வென்ற சட்டமன்ற உறுப்பினர், இந்திய வரலாற்றின் சாதனைத் தலைவர் கலைஞர்,

தமிழ் மொழியிலும் பகுத்தறிவு புகுத்தியவர் கலைஞர், கலைஞர் மக்களிடத்திலும்,தமிழ் மொழியிலும் பகுத்தறிவை புகுத்தினார்,ஆம்,

உடல் ஊனமுற்றோர் - மாற்றுத்திறனாளி, அரவாணி - திருநங்கை, விதவை - கைம்பெண், பிச்சைக்காரர் - இரவலர் என் இன்னும் பலவாறு,

இந்தியாவிலே தமிழ்நாட்டில் தான் கிராமங்களில் முதன்முதலாக மின் இணைப்பு கலைஞர்,

கிராமங்களின் வளர்ச்சியில் கலைஞர், நகர்ப்புறங்களின் கல்வி வளர்ச்சி மட்டும் போதாது என்று, கிராமங்களின் அடிப்படைகல்வி பெரும் வசதி, உயர்கல்வி வசதிகள், முதல் தலைமுறை கல்வி, மருத்துவம், பொறியியல்,அறிவியல் மற்றும் கலை கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என கிராமங்களை கல்வி வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்றவர் கலைஞர், அதே போல ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவம்,

குறளோவியம் தீட்டிய அய்யன் திருவள்ளுவனுக்கு கோட்டம், குமரி முனையில் வான்தொடும் சிலை,

கலைஞர் ஓர் அற்புத கவிதை,தானே எழுத்தாகி,சொல்லாகி, பொருளாகி,யாப்புமாகி, அணியுமாகி, மொழியாய், மொழியின் வளமாய், கவிதையாய், தன்னைத் தானே எழுதிக் கொண்ட அழகான அற்புத கவிதை கலைஞர், பெரியாரும், அண்ணாவும் வியந்த கலைஞர்,



**த. சௌந்தரராஜன்,**
முன்னாள் இணை இயக்குனர்/ துணை ஆணையர், வேலூர் மாநகராட்சி.

பள்ளிப் படிப்புக்காக போராடியவர், சுயமரியாதைக்காக போராடியவர், இந்தி எதிர்ப்பு, தமிழ் வாழ்க, முதல் கையெழுத்து பிரதிநிதி மாணவர் முரசு,முதல் விவாதம் ஆத்திகம், நாத்திகம், எத்தனை அறிவார்ந்தவர் கலைஞர் என வாழ்த்தினர்.

ஏழைகளின் சிந்தனையாளர் கலைஞர், மக்கள்படும் துன்பங்களைச் சுற்றியே இருந்தது,தனது 48வது பிறந்தநாளில் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம்,

கை ரிக்சா ஒழித்து சைக்கிள் ரிக்சா தந்தார்; கண்ணொளி தந்தார்!

ஜனகனமன எனத் தொடங்கும் வங்கமொழியின் தேசிய கீதத்திற்கு இணையான மரியாதை தமிழ் மொழியில் கிடைக்க 1969இல் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்தில் திருத்தம் செய்து 1970 முதல் இன்றுவரை அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்க செய்தவர் கலைஞர். பொதுமக்கள் நேரடியாக மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கள் கொடுக்கும் முறையை கொண்டு வந்தவரும் கலைஞர்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அந்நிய நாட்டின் அத்துமீறலுக்கு எதிரான முதல் குரலாக கலைஞரின் குரலாகத்தான் இருக்க முடியும், அவசர காலகட்டத்தில் மத்திய அரசுக்கு நிதி வசூல் கொடுப்பதிலும் முன்னோடியாக, முதல் ஆளாக திகழ்ந்தவர் கலைஞர்.

பிறவிலேயே பேசவோ கேட்கவோ இயலாத குழந்தைகள், கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் மேல் சிகிச்சை பெற்று (COCHLEAR IMPLANT) புது வாழ்வு பெற்றனர், ஜெனிவா ஐநா பொது மன்றம் இதனை கண்டு வியந்து ஆய்வு மேற்கொண்டது, ஆய்வில் மருத்துவம் படிக்காத கலைஞர் திட்டமே என அறிந்து ஐநா சபையில் கரவொலி எழுப்பி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது,

கலைஞர் பல பிரதமர்கள் மட்டுமின்றி குடியரசுத் தலைவரை உருவாக்கும் ஆற்றலையும் பெற்று இருந்தார்,இந்திய அரசியல் வரலாற்றில் கலைஞருக்கு தனி இடம் உண்டு அத்தகைய சாணக்கிய திறமை மிக்க கலைஞரை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் போற்றி புகழாத அரசியல் தலைவர்கள் இல்லை என்றே கூறலாம்.

பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை என இந்திய துணை கண்டத்தில் முதல்முறையாக அமல்படுத்திய ஒரே தலைவர் கலைஞர்,

இந்தியாவில் தமிழ்நாட்டை தொழிற்சாலை நிறைந்த முன்னோடி மாநிலமாக ஆக்கியவர் கலைஞர், டைட்டல்பார்க், கார் தொழிற்சாலைகள், கண்ணாடி தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக் தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமானது,

கலைஞர் பேச்சில் சரணாகதி அடைந்து விடுவார்கள், கலைஞர் பேசுகின்ற பொதுக்கூட்டம் என்றால் மாற்றாரும் மறைந்து நின்று கேட்பார், அனல்பறக்கும் பேச்சால், கடுங்குளிரும் காணாமல் போகும், கட்டுக்கோப்பாய், ராணுவ வீரர்கள் போல் தலைவர்கள், தொண்டர்கள், இளைஞர்கள், இலக்கியவாதிகள், தமிழறிஞர்கள், படைப்பாளிகள்,பொதுமக்கள்,நடுநிலையாளர்கள் என அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் கலைஞரின் பேச்சு, கலைஞரை எதிர்க்க நினைத்தவர்களும் கலைஞரின் பேச்சைக் கேட்டு சரணாகதி அடைந்து விடுவார்கள், அல்லது புஸ்வானம் ஆகிவிடுவார்கள்,

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

சட்ட பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்,

இந்திய கடல்சார் பல்கலைக்கழகம், திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம், தமிழ்நாடு தோட்டக்கலை பல்கலைக்கழகங்கள் என உருவானது,

குடிசைவாசிகளை மாடி வீட்டுக்காரர்களாக மாற்றிய கலைஞரின் திட்டத்தை ஜெயபிரகாஷ் நாராயணன் மற்றும் வி.வி. கிரி ஆகியோர் வெகுவாக பாராட்டினார்கள்.

பெரியார் அவர்கள் தன்னைவிட 45 வயது குறைந்தவரை கலைஞர் என்று மரியாதையுடன் அழைத்தது அனைவருக்கும் ஆச்சரியம் தந்தது,

சாதி சமயம் மறந்து ஒற்றுமையாய் வாழ்ந்திட பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைத்து, சமூக சீர்திருத்தத்துக்காக தனித்துறையை உருவாக்கியவர் கலைஞர்,

அனைத்து துறைகளிலும் உச்சம் தொட்டவர் கலைஞர்,

பத்திரிக்கையாளராக, திரைக்கதையாளராக, வசன கர்த்தாவாக,

பாடல் ஆசிரியராக,

எழுத்தாளராக, கவிஞராக,

நாவல்,நாடக ஆசிரியராக, கட்டுரையாசிரியராக, உரைநடை,

சிறுகதை,திறனாய்வாளர்,ஆராய்ச்சியாளர், சிற்றிலக்கியவாதி, இலக்கியப் புலவர், தொண்டனாக, பேச்சாளராக, அரசியல்வாதியாக, சட்டமன்ற உறுப்பினராக, கட்சித் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, மாண்புமிகு அமைச்சராக, முதலமைச்சராக,

இப்படி தான் தொட்ட துறைகளில் யாரும் தொட முடியாத சிகரம் தொட்டு, விஞ்சமுடியாத வரலாற்றுப் புகழைப் பெற்றவர் கலைஞர்,

சமூக அக்கறையின்பால் கொண்ட பற்றால், உலகத் தமிழர்களும் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் தொண்டாற்றிய கலைஞர் உலகம் உள்ளவரை வள்ளுவரை போல் வாழ்ந்து கொண்டே இருப்பார், நூற்றாண்டு நூலகமாய் திகழ்வார் தலைவர் கலைஞர். ●

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஆக. 9–

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

விழுப்புரம் ( தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் இன்று (09. 08.2025 – சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.



மாநில பொறியாளர் அணி துணை செயலாளரும் கடலூர் மண்டல பொறியாளர் அணி பொறுப்பாளருமான சி.பிரதீப் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே. பி.கருணா ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றுகின்றனர்

சட்டப்பேரவை உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்ள இருக்கும் இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மாவட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.